Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 35 இதழ் - 4 ஏப்ரல் - 2022

தனிப்பிரதி ரூ.10/-



கடந்த ஏப்ரல் 18 –20 தேதிகளில் ஏற்காடு மலையில் நடந்த ஊழியர் கருத்தரங்கின் போது....



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பிசாசுகளைத் துரத்துதல் | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| அறுவடையை நோக்கிய .... | 22 |
| இயேசுவிடம் வந்த தகப்பன் | 26 |
| பொறுமையும் - பொறாமையும் | 29 |
| தற்காலிகமான காரியங்கள் ... | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030  Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 35  April - 2022  Issue - 4**

ஆசிரியர் உரை

## ....மிஞ்சி எண்ண வேண்டாம்

இப்பூவுலகில் வாழும்படியாகப் படைக்கப்பட்ட மானிடத்தின் சமுதாய வாழ்வில் அவன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் ஒன்று நிலைக்கு மிஞ்சின நினைப்பு. அதாவது, தன்னைப்பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக்கொள்வது. தீதான இந்நினைப்பிற்கு சமுதாயம் வேறு பல பதங்களையும் தானமாகத் தந்துள்ளது. பெருமை, கர்வம், அகம்பாவம், மேட்டிமை, தலைக்கனம் என்று இத்தீங்குணத்தால் தீண்டப்படாதவர்கள் சமுதாயத்தில் குறைவாகவே உள்ளனர். தேசமோ, மொழியோ, கலாச்சாரமோ, கல்வியோ, பட்டமோ இதற்கு விதிவிலக்காக இல்லை. சொல்லப்போனால், ஏதுமறியாத சிறு பிள்ளைகள் கூட தங்களையுமறியாமல் இதன் பாதிப்புக்குள்ளாகி விடுவதை நாம் கவனிக்க முடியும்.

சரி, சீரழிவை ஏற்படுத்தும் இத்தீங்குணம் மாம்ச சிந்தை கொண்ட மண்ணுக்கான மனிதர்களிடம் காணப்படுவதில் வியப்பொன்றுமில்லை. ஆனால், ஆன்மீக சிந்தைகொண்டு விண்ணுக்காக வாழ வேண்டிய மெய்க் கிறிஸ்தவர்களிடத்தில் இது காணப்படுவதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? பாழ்பட்ட சிந்தை கொண்ட நமக்கே இதைச் சீரணிப்பது சிரமமாக இருக்குமானால், தீமையைப் பார்க்கக்கூடாத சுத்தக்கண்ணனாகிய (ஆபகூக் 1:13) நம் தேவனுக்கு எப்படி இருக்குமென்று எண்ணிப்பாருங்கள்! மனமேட்டிமை தேவனுக்கு ஏற்காத குணம் என்பதைத் தாண்டி தேவன் எதிர்க்கும் ஒரு குணமாகவும் உள்ளது. மானிடத்தின் ஏனைய ஏராளமான பாவங்களைக் கவனித்து சகித்துக் கொண்டிருக்கும். நம் தேவன் பெருமை, மேட்டிமை என்று வரும்போது அதை எதிர்க்க ஆரம்பித்து விடுகிறார். (நீதி. 3:34;யாக் 4:6; I பேதுரு 5:5). இதன் மூலம் பெருமையைத் தேவன் எப்படிப் பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேவன் எதிர்க்கும் இம் மேட்டிமை சிந்தை தேவனுக்காய் வாழத் தங்களை ஒப்புக்கொடுத்த ரோமாபுரி கிறிஸ்துவின் சபைக்குள்ளாகத் தென்பட்டபடியால், தமது ஆவியானவரைக் கொண்டு பவுலடியார் மூலம் அவர்களுக்கு எழுதின நிருபத்தில் **அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும்** [ரோமர்:12:3] என்று கூறியுள்ளார்.

எல்லாவற்றையும் கவனித்து அறிகிற தேவன் ஏன் இப்படி எழுதினார் என்பதைத் தெரிந்து கொள்ள நமது வழக்கத்தின்படி இதன் பின்னணிக் காரியங்களைக் கவனித்து விடுவோம். சரியா?

அன்றைய உலகின் வல்லரசாகத் திகழ்ந்த ரோமப் பேரரசின் தலைநகரப் பட்டணமாக இருந்தது ரோமாபுரி. தங்கள் பக்தி வாழ்வினி மித்தம் உலகம் அறிந்த ஒரு கிறிஸ்துவின் சபை அங்கிருந்தது. இச்சபையின் ஆரம்பம் பற்றிய ஆதாரங்கள் ஏனோ ஆவியான வராலே நமக்கு அருளப்படவில்லை. ஆயினும், இச்சபை எப்படி ஆரம்பமாகியிருக்கலாம் என்பதற்கான இரண்டு சாத்தியக் கூறுகள் உண்டு. 1. பெந்தெகொஸ்தே பண்டிகைக் கொண் டாட்டத்திற்காக ரோமாபுரியிலிருந்து எருசலேமுக்கு வந்திருந்த வர்கள், அந்நாளில் பேதுரு செய்த 3000 பேரை இரட்சித்த அந்த மகாப் பிரசங்கத்தைக் கேட்டு, இருதயத்தில் குத்தப்பட்டு, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று ஊர் திரும்பிய நிலையில், இச்சபையை ஆரம்பித்திருக்க வேண்டும். 2. முதல் இரத்தசாட்சியாய் மரித்த ஸ்தேவானின் மரணத்திற்குப் பிறகு, எருசலேமிலிருந்த சபைக்குத் துன்பம் வந்த நிலையில் சிதறப்பட்டுப் போனவர்கள், ரோமிற்கு சென்று, அங்கு ஒன்று கூடி ஒரு சபையை உருவாகியிருக்கக்கூடும் [அப்.8:1]

எது எப்படியோ, பவுலடியார் இந்நிருபத்தை எழுதினபோது அங்கு ஒரு சபை, அதுவும் ஒரு நல்ல சபை இருந்துள்ளது [ரோமர் 1:8]. இச்சபையில் புறவினத்துக் கிறிஸ்தவர்கள் அதிகம் இருந்து ள்ளதாகத் தெரிகிறது. ரோமபுரி சபை தங்கள் பக்தி வாழ்வுக்காக அன்றைய உலகத்தால் அறியப்பட்ட ஒரு சபையாக இருந் திருந்தாலும் தேவன் விரும்பாத இன்னும் சரியாகச் சொல்வதானால் தேவன் எதிர்க்கும் பெருமை, மேட்டிமை போன்றவை அவர்களுக் குள்ளாகத் தலைதூக்க ஆரம்பித் திருந்தது. எந்த ஓர் ஆத்துமாவும் கெட்டுப் போகக் கூடாது என்பதில் அக்கறை காட்டும் நம் தேவன்

(I பேதுரு 3:9) கெட்டுப்போன நிலைமையிலிருந்து மீட்கப்பட்ட ஒரு கூட்ட ஆத்துமாக்கள் அழிந்து போவதைப் பார்த்துக் கொண்டு வாளாயிருப்பாரா? மாட்டார். இந்நூல் எழுதப்பட்டதற்கான நோக்கங்களில் இதுவும் ஒன்று.

இது **ரோமாபுரியாருக்கு எழுதப்பட்ட நற்செய்தி நூல்** என்று அழைக்கபடுவதற்கான தகுதி கொண்டது. எப்படியெனில், மற்ற நற்செய்தி நூல்கள் இயேசுவின் வார்த்தைகளையும், வாழ்க்கை யையும் குறித்துப் பேசும்போது, இந்நூல் இயேசுகிறிஸ்துவின் **தியாக மரணத்தை மையப்படுத்திப் பேசுகிறது.** இரண்டு பிரதான கருத்துக்களை உள்ளடக்கியதாக இந்நூல் உள்ளது. ஒன்று, கொள்கை மற்றும் உபதேசம் (1 – 11) மற்றொன்று, நடைமுறை கிறிஸ்தவ வாழ்வு (12–16) நம் தலைப்பு இரண்டாம் பகுதியில் இடம் பெற்றுள்ளது. தேவனுடைய பார்வையில் கொள்கையும், உபதேணூமும் முக்கியமானதாக இருந்தாலும், அதைவிட முக்கியமானதாக நடைமுறைக் கிறிஸ்தவ வாழ்வு உள்ளது. எப்படியெனில், இரட்சிக்கப்பட்ட என்ன செய்ய வேண்டும் என்பதற்கு **ஒரே ஒரு நூலை** ஒதுக்கிய தேவன் ( அப்போஸ்தலர் நடபடிகள்) அப்படி இரட்சிக்கட்ட ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு, நான்கு நற்செய்தி நூல்கள், வெளிப்படுத்தின விசேஷம் **தவிர 21 நூல்களைக் கொடுத்துள்ளார். இங்கே** பரலோகம் செல்லப் பக்தி வாழ்வு எவ்வளவு முக்கியம் என்பதை நாம் கவனிக்க வேண்டும்

இப்படிப் பக்தி வாழ்வை மையப்படுத்தும் பகுதி ஆரம்பமாகும் 12–ம் அதிகாரத்தின் மூன்றாம் வசனத்தில்**, எண்ண வேண்டியாதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம்** என்று இடம் பெற்றுள்ளது. ஏன் மேட்டிமை பற்றி எழுதினார் என்பதைப் புரிந்து கொள்ள 11 –ம் அதிகாரதின் பிற்பகுதியை கவனிக்க வேண்டும். அதிகாரம் 11:18 – ல் நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே என்றும் 11:20 – ல் **மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு என்றும்**, இன்னும் 11 :25 – ல் **உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கும்......** என்றுள்ளது. ஆக, பேட்டிமைச் சிந்தை ரோமாபுரி சபையாரிடம் தலைதூக்கத் தொடங்கி விட்டது. இதை முளையிலேயே கிள்ளி எறிய தேவன் விரும்பினார். அவருடைய பிள்ளைகள் அவரைப் போல இருக்க வேண்டுமென்பது தேவ எதிர்பார்ப்பாக (I பேதுரு 1:15) எப்போதும் இருந்துள்ளது

இந்த ரோமாபுரிச் சபையாரைச் சீர்படுத்தும் முயற்சியில் ஆவியானவரின் துணையோடு இறங்கிய பவுலடியார், முதல் இரண்டு வசனங்களில் மன்றாட்டு அணுகுமுறையை மேற் கொள்கிறார். ஆம், 12:1–ல் நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும்

தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று... **வேண்டிக் கொள்ளுகிறேன்** என்று. உங்கள் சிந்தையும், செயலும் தேவனுக்குப் **பிரியமானவைகளாக** இல்லாவிட்டால் அதாவது, தேவன் அங்கீகரிக்காத ஒன்றாக இருந்துவிட்டால், அது புத்தியற்ற ஒன்றாகும், தேவப்பார்வையில் அருவருப்பானதாகவும் மாறக்கூடும் என்று கூறுகிறார். [நீதி28:9], இப்படித் **தேவனோடு** அவர்களைச் சம்பந்தப்படுத்திப் பேசிவிட்டு, இரண்டாம் வசனத்தில் அவர்களை **உலகத்தோடு** சம்பந்தப்படுத்திப் பேசுகிறார். **நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத் தக்கதாக உங்கள் மனம் புதிதாக தாகிறதினாலே மறுரூபமாருங்கள்** என்று. நீங்கள் உலகத்துக் குரியவர்கள் அல்ல. ஆக, உலக மக்களைப் போல மேட்டிமை சிந்தை கொண்டு நீங்கள் நடந்து கொள்ள வேண்டாம். உங்கள் மனதைப் புதிதாக்குங்கள், மறு ரூபமாகுங்கள் என்று கூறுகிறார். அப்பொழு தான் தேவ சித்தத்தை உங்களால் அறிந்து கொள்ள முடியும் என்று.

இப்படித் தேவனோடும், உலகத்தோடும் அவர்களைச் சம்பந்தப் படுத்திப் பேசிவிட்டு, மூன்றாம் வசனத்தில் அவர்களை அவர் களுக்குள் கொண்டு வந்து நிறுத்தி சிந்திக்கத் தூண்டுகிறார். முதலில், மன்றாடிய பவுல், இங்கே தனது அப்போஸ்தல அதிகார த்தைக் கையிலெடுத்து, **எச்சரித்துப் பேசுகிறார்.** ஆம், **எனக்கு அருளபட்ட கிருபையினாலே நான் உங்களுக்குச் சொல்லுகிறா தவது என்று.** இந்தப் 12-ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதியை படித்தால் 25-க்கும் அதிகமான பக்திப் பண்புகள் பட்டியலிடப்பட்டி ருப்பதைக் காணமுடியும் அவைகளை அவர்கள் முழுமையாகப் பெற வேண்டுமானால், முதலில் மேட்டிமைச் சிந்தைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று முனைகிறார். மேட்டிமைச் சிந்தை எவ்வளவு ஆபத்தானது என்று பாருங்கள்! அப்படியில்லாவிட்டால் தேவன் இதை எதிர்ப்பாரா?

தேவன் எதிர்க்கும் மேட்டிமை அந்த நல்ல சபையாரிடம் காணப்படக் கூடாது என்பதில் கவனம் செலுத்தும் பவுல், அதைக் களைந்து போட இரண்டு வகையான அணுகுமுறையை மேற் கொள்கிறார். முதலில், எதிர்மறை அணுகுமுறை. ஆம், உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம். இரண்டாவது, நேர்மறை அணுகுமுறை அவனவனுக்குத் தேவன் பகிர்ந்தளித்த விசுவாச அளவின்படியே எண்ண வேண்டும். இந்தக் கட்டளை ரோமச் சபையிலுள்ள எல்லோருக்குமானது. ஆகவே தான், உங்களில் எவனானாலும் என்று குறிப்பிடுகிறார். தேவப் பார்வையில் தங்களைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டிய ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். இது எனக்கு இல்லை, உனக்கு இல்லை என்ற நிலை கிடையாது. இக்கருத்தைத்தான் அவர்கள் உள்வாங்கித் தங்களைச் சீர்படுத்திக் கொள்ளும்படி பவுல் வலியுறுத்துகிறார்.

சரி, இப்பொழுது இதிலிருந்து நமது பக்தி வாழ்வுக்கு என்ன பாடங்கள் கிடைக்கிறதென்று கவனிப்போம்.

## I மிஞ்சி எண்ணக்கூடாது

ரோமர் 12:3 லிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற முதல்பாடம், எவனானாலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கும் மேலாக எண்ணக் கூடாது என்பது.

எவனானாலும் என்னும் வார்த்தை கவனிக்கத்தக்கது. ஒரு சபை என்று வரும்போது, அதில் பல தரப்பு மக்கள் இருப்பார்கள். படித்தவர், படிக்காதவர், பணக்காரர், ஏழை, ஆண், பெண், மூத்த விசுவாசி – புதிய விசுவாசி என்று. பொதுவாகவே, சபையில், கொடுக்கப்படும் ஓர் அறிவிப்பை, பிரசங்கிக்கப்படும் ஒரு செய்தியை, வலியுறுத்தப்படும் ஒரு கருத்தை ஒரு தரப்பால் இது எனக்கானதல்ல, எங்களுக் காதையல்ல என்று நினைப்பதுண்டு. ஆனால், அது அப்படியல்ல. வெளிப்படுத்தப்படும். தேவ வார்த்தைகள் எனக்கானது என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் அது பெருமையின் அறிகுறியே!

இந்தப் பெருமையின் விளைவு மிகவும் மோசமானது. தன்னை ஒரு பொருட்டென்று எண்ணிச் செயல்படுவது பெரும் ஆபத்தில் கொண்டுபோய் நிறுத்தும். இதற்கு உதாரணமாக, மோசேயின் சகோதரி மிரியாம் மற்றும் மோசேக்கு விரோதமாக அணிதிரண்ட கோராகு, தாத்தான், அபிராம் போன்றவர்களை நாம் குறிப்பிடலாம்.

ஆம், தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்த மோசேக்கு நிகராகத் தங்களை எண்ணி, அவனுக்கு விரோதமாகப் பேசினபோது ஆரோனுக்கும், மிரியாமுக்கும், எதிராகத் தேவ கோபம் எழும்பி மிரியாம் குஷ்டரோகியாக மாறினாள் (எண்.12:8). இன்னும் எண்ணாகமம் 16–ம் அதிகாரத்தில், கோராகு, தாத்தாள், அபிராம், ஓன் போன்றவர்கள் **தாங்கள் மிஞ்சிப் போகிறோம் என்பது தெரியாமல்,** மோசேயும், ஆரோனும் மிஞ்சிப்போகிறார்கள் என்று பிரச்சனை எழுப்பியபோது, தேவ கோபம் மூண்டு, கோராகையும், அவனுக்குரிய சகல மனிதரையும், அவர்களுக் குரியவைகளையும் பூமி தன் வாயைத் திறந்து விழுங்கிப் போட்டது (16:32).

ஆகையால், அருமையானவர்களே! தேவப் பிள்ளையாக வாழ விரும்பும் ஒருவன் ஒருபோதும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணிவிடக் கூடாது. இந்நிலை அழிவை ஏற்படுத்தக் கூடியது. ஒரு நல்ல சபையாக இருந்த ரோமாபுரி சபையில் மிஞ்சின நினைப்பு பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்று

பவுலடியார் பயந்தார். அதினிமித்தமாகவே நீங்கள் மிஞ்சி எண்ண வேண்டாம் என்று எச்சரித்தார். இக்காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாய் உள்ளோம்? ஆவிக்குரிய நிலையில் இதன் பாதிப்பு மிகவும் அதிகமாக இருக்கும். தனிமனித அழிவோடு நிற்காமல் ஆத்தும அழிவுக்குக் காரணமாகி நித்திய வாழ்வுக்கே உளை வைத்துவிடும். ஆகவே தான், பவுல் இங்கே பதறுகிறார். தொடர்ந்து ஒரு நல்ல சபையாக, ஒரு நல்ல கிறிஸ்தவனாக இருப்பதற்கு இச்சிந்தையைத் தூக்கித்தூர எறிந்து விட வேண்டும். செய்வோமா?

## II குறைவாகவும் எண்ணக்கூடாது

ரோமர் 12–3–லிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இரண்டாம் பாடம், ஒருவன் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்குக் குறைவாகவும் எண்ணி விடக்கூடாது என்பது.

எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணுவது எப்படி ஆபத்தானதோ அதுபோல எண்ண வேண்டியதற்கும் குறையாக எண்ணுவதும் ஒரு வகையில் ஆபத்தானதே. இதன் மூலம் தேவ வாய்ப்பையும், தேவ ஆசீர்வாதத்தையும் இழந்து போக வாய்ப்புண்டு.

எண்ண வேண்டியதற்கும் குறைவாக எண்ணுவதற்கு **முட்செடிமோசேயை** நாம் உதாரணமாகக் காட்ட முடியும். மோசே தன் பக்தி வாழ்விலும், தேவப் பணியிலும் உச்சம் தொட்டவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. மோசேக்கு இணையான வனாக இஸ்ரவேலர்களால் யாரையும் பார்க்க முடியவில்லை. இந்தளவு சிறப்புக்குரியவராக இருந்தாலும் தேவபார்வதமாகிய ஓரேப் மலையில், கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவில் தோன்றி தேவ சேவைக்காக அழைத்த போது, தன் தகுதி தெரியாமல் மோசே வெளிப்படுத்தின தயக்கங்களை இங்கே கவனியுங்கள். என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா (யாத் 3:10) என்ற போது, **நான் எம்மாத்திரம்?** என்றான் (3:11). அடுத்துஇ உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று சொல்லும் போது, **அவருடைய நாமம் என்னவென்று கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?** (3:13). **அவர்கள் என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள் கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை**

**என்று சொல்லுவார்களே** என்றான் [4:1] இன்னும் **நான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்குவாயும், மந்த நாவும் உள்ளவன்** என்றான் [4:10]. இத்தோடும் நிற்காமல், **ஆண்டவரே நீர் அனுப்பச் சித்தமா யிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்** என்றார் [4:13].

மோசே யார் என்றும், அவன் பெலம் என்ன , பெலவீனம் என்ன என்றும் தேவனுக்குத் தெரியாதா? இதெல்லாம் தெரியாமலா தேவன் இவனை அழைத்திருப்பார்? நல்ல வேளை, ஒரு கட்டத்தில் தேவச் சித்தத்தைப் புரிந்து கொண்டு அழைப்பை ஏற்று தன்னை - முழுமையாக ஒப்புக் கொடுத்து வேதாகம சரித்திரத்தில் ஒரு மங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டான். தேவக் காரியங்களில் ஈடுபட சாக்குப்போக்குகளும் தயக்கங்களும் தாழ்வு மனப்பான்மையும் கூடாது. கர்த்தாவே சொல்லும். அடியேன் கேட்கிறேன் என்ற மனநிலை எல்லோருக்கும் வேண்டும். சரியா?

அருமையானவர்களே! மோசே போன்று நாமும் அழைப்பைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய அழைப்பு நற்செய்தியின்படியான அழைப்பு [II தெச 2:14]. முதலாவது இந்த அழைப்பை உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு தன் ஊழிய நாட்களில் இதற்கான அழைப்பைக் கொடுத்து விட்டார். [மத்11:28]. இந்த அழைப்புகளை ஒருவன் ஏற்றுக் கொண்டு அவர் சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து கிறிஸ்துவின் நோக்கங்களை நிறை வேற்றுவதற்கு, கிறிஸ்துவின் சபைக்காக உழைப்பதற்கு எவ்வித சாக்குப் போக்குகளையும் சொல்லாமல், என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்யப் பெலனுண்டு [பிலி 4:13] என்று எண்ணி நாம் செயல்பட வேண்டும். செய்வோமா?

## III தெளிந்த மனதோடு எண்ண வேண்டும்

ரோமர் 12:3 -லிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இன்னொரு பாடம், எல்லாவற்றிலும் தெளிந்த எண்ணமுடையவர் களாய் இருக்க வேண்டும் என்பது.

இந்த வசனத்தை நாம் கவனிக்கும் போது, தெளிந்த எண்ணம் வேண்ம் என்று மாத்திரம் கொல்லாமல், தேவன் பனிர்ந்த விசுவாச அளவின்படியும் என்றுள்ளது. ஆக, தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படி தெளிந்த எண்ணமுடையவர்களாய் எண்ண வேண்டும். இங்கே தெளிந்த என்பதற்கான பொருள் முக்கியமானது. அதாவது, அறிவார்ந்த, நியாயமான, நுட்பமான முறையில் இருக்கவேண்டும் ஏனெனில், இது தேவன் பகிர்ந்தளித்த ஒன்றுடன் சம்பந்தப்படுகிறது.

அப்படியானால், தேவன் எதைப் பகிர்ந்தளித்தார்? இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில், புதிய ஏற்பாடு முழுமையாக வெளிப்படுத்தப் பட்டு நமக்கிருப்பது போல் எழுத்து வடிவில் இல்லை. ஆகவே சிறப்பு தேவ வழி நடத்துதல் அவசியப்பட்டது. தேவன் வரங்களையும், அற்புத வல்லமையையும் அக்காலகட்டத்தில் கொடுத்தார். வரங்களில் வித்தியாசம் உண்டு என்பதை நாமறிவோம். (கொரி 12:4) இப்படி ஒரு சிறப்பு நோக்கத்திற்காக வரங்கள் கொடுக்கப்பட்டி ருக்கும் போது அதைப் பெற்று கொண்டவர்கள் தெளிந்த புத்தியோடு நடந்து கொள்ளவில்லை என்று தெரிகிறது.

பவுலடியார் ஆவியின் ஏவுதலாலும், வந்து கிடைத்த தகவல் களாலும் இதைத் தெரிந்து கொண்டார் அதாவது, முக்கியமான வரங்களை பெற்றுகொண்டவர்கள் முக்கியத்துவம் குறைந்த வரங்கள் பெற்றவர்களை அற்பமாய் எண்ணியுள்ளனர். இந்த மேட்டிமைச் சிந்தையை அடித்து நொறுக்கும்படியாகவே, **இது தேவன் பகிர்ந்தளித்தது** என்று கூறுகிறார். அதாவது, நீங்கள் உங்கள் தகுதியினால் இந்த வரங்களை பெற்றுக்கொள்ளவில்லை. தேவன் அவருடைய பார்வையின்படி பகிர்ந்தளித்துள்ளார். ஆகவே, நீங்கள் பெருமையடித்துக் கொள்ள ஒன்றுமில்லை என்று கூறுகிறார். இவ்வுண்மையை அவர்கள் ஏற்று நடப்பதற்கு உதவியாக அடுத்த சில வசனங்களில் எடுத்துகாட்டு கொடுத்து விளக்க மளித்துள்ளார்.

அருமையானவர்களே! தேவக் தம்முடைய தீர்மானத்தின்படி நமக்குக் கொடுத்துள்ளவைகள் பற்றி நாம் எப்படிப்பட்டவர்களா யுள்ளோம்? அவைகளை நாம் நம்முடைய தகுதிகளால் பெற்றுக் கொள்ளவில்லை. சரீர நன்மைகள் அனைத்தும் தேவன் போட்ட பிச்சை ஆம், தேவன் ஜீவனையும், சுவாசத்தையும், பெலத்தையும் கூட்டித் தந்ததால் நாம் இவைகளைப் பெற்றுள்ளோம் (I நாளா 29:14) அத்தோடு, நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி இரட்சிக்கபட்டபவர் களாயிருந்தால், அதாவது விசுவாசித்து (மாற் 16:15,16) மனந்திரும்பி (அப் 2:38) அறிக்கை செயது (ரோமர் 10:9,10) பாவ மன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்று (அப்22:16) கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கபட்டிருந்தால், அதுவும் நம்முடைய முயற்சியாலும், தகுதியாலும் நடந்ததல்ல. ஏனெனில், **கிருபை யினாலே விசு வாசத்தைக் கொண்டு இரட்சிக்கபட்டீர்கள்; இது உங்களால் உண்டான தல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டான தல்ல என்று வாசிக்க முடியும்.** (எ.பே.2:8,9)

ஆகையால், இந்த உண்மைகளைப் புரிந்து நாம் மாம்ச வாழ்விலும், ஆவியின் வாழ்விலும் தெளிந்த எண்ணமுள்ளவர் களாயிருந்து, நமது பக்திப் பயணத்தை சீராகவும், சிறப்பாகவும் நடத்தி பரலோக பாக்கியத்தைப் பெற்றுக் கொள்வோமாக! ஆமென்!! ✝

# *பிசாசுகளைத் துரத்துதல்*

Bro. J.C. **சோட்**

**மே**லும் பலர், அசுத்த ஆவிகள் ஒன்றும் தங்களுக்குப் பிடிக்கவில்லையென்றும், தங்களுக்கு ஏதோ ஒரு வியாதி இருந்த தென்றும், புத்தி சுவாதீனத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், தங் களுக்கு வந்த வியாதிக்குத் கூட தங்கள் கிரியைகளே காரணம் என்றும் சொல்லுகிறார்கள். சில வேளைகளில் வியாதிகளுக்கும் அசுத்த ஆவிகளுக்கும் சம்பந்தம் உண்டு. அது எப்போதுமே அப்ப டியிருப்பதில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால், அசுத்த ஆவி யால் பிடிக்கப்பட்டவர்கள் சம்பந்தமான வசனப்பகுதிகளை நாம் கூர்ந்து நோக்கும் போது நோய்களுக்கும், அசுத்த ஆவிகளுக்கும் உள்ள வேறுபாட்டை நம் ஆண்டவர் இயேசு தெளிவுறக் காட்டியி ருப்பார். இங்கே இந்நாட்களில் அசுத்த ஆவிகள் இல்லாதிருந் தால், மனிதர்களைப் பிடித்திருந்த ஆவி எது? என்ற கேள்வி எழுகிறது. இதற்கு, வேதவாக்கியங்கள் அந்நாட்களில் மனிதர் களை அசுத்த ஆவிகள் பிடித்திருந்ததை உறுதி செய்கின்றன.

நிச்சயமாகவே, முதல் நூற்றாண்டிலிருந்த எல்லோருக்கும் பிசாசு பிடித்திருக்கவில்லை. ஆனால், வேதம் சொல்லுகிறது. பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள், அற்புதமாக அவைகளைத் துரத்துகிறவர்களிடத்தில் வந்திருக்கிறர்கள். இது தொடர்பாக வேதாகமத்தில் பல வசனங்கள் உண்டு. அதில் , மத்தேயு 12:22 –30–ம் வசனப்பகுதிகளை மட்டும் பார்ப்போம். அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுந்தக் கதாக அவனைச் சொஸ்தமாக்கினார். ஜனங்களெல்லாரும் ஆச்ச ரியப்பட்டு: தாவீதின் குமாரன் இவர் தானோ? என்றார்கள். பரிசே யர் அதைக்கேட்டு இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றபடி யல்ல என்றார்கள். இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப்பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்க மாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோத மா தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே ; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நான் நிலைநிற்கும்? பெயல்செபூலி னாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைக ளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங் களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். நான்

தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்ஜியம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து அவன் உடமைகளை எப்படிக் கொள்ளையிடக்ககூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். இங்கே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாத்தானின் வல்லமையாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொழிய பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன் புகுந்து, அவன் உடமைகளைப் எப்படி கொள்ளையிடக் கூடும்? கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடலாம். என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான். இங்கே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சாத்தானின் வல்லமையாலே பிசாசுகளைத் துரத்துவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறார். இதை, வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்து பிசாசுக்காக வேலை செய்தாகச் சொன்னால், கிறிஸ்து பிசாசுக்காக வேலை செய்வதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு கிறிஸ்துவானவர், சாத்தான் சாத்தானை எப்படித் துரத்த முடியும்? என்று கேட்டார். மேலும் அவர், தனக்குத் தானே பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும், ஏன் சாத்தானின் ராஜ்யமும் கூட பாழாய்ப் போம் என்றும் சொன்னார்.

இயேசு கிறிஸ்து தாம் அசுத்த ஆவிகளைத் துரத்தினது மாத்திரமல்ல அப்போஸ்தலர்களும் அப்படிச் செய்யும்படி கட்டளையிட்டார். அதாவது வரையறுக்கப்பட்ட கட்டளையை அவர் அப்போஸ்தலர் களுக்குக் கொடுக்கும் போது வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளை குணப்படுத்துங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள் என்று சொன்னார். (மத்.10:8). அதே அப்போஸ்தலர்களிடம் பிரதான கட்டளைகளைக் கொடுக்கும் போது இவ்விதமாகச் சொன்னார். மாற்கு 16:17,18, விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

மேற்சொல்லப்பட்ட வசனத்தில் நமதாண்டவர் பிசாசுகளைத் துரத்துவதற்கும், வியாதியஸ்தர்களைச் சொஸ்தப்படுத்துவதற்

குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுவதற்கும், மற்ற அற்புத அடையாளங்களைச் செய்வதற்கும் உண்டான வித்தியாசத்தைக் காட்டுகிறார். அதாவது, சபையானது ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், அதன் வளர்ச்சிக்காகவும், தேவனுடைய வல்லமை வெளிப்படும்படியாகவும் இது கொடுக்கப்பட்டது. அந்நாட்களிலிருந்த எல்லோருக்கும் பிசாசு பிடித்திருக்கவில்லை என்பதை நாம் முதலில் உணர வேண்டும். அதாவது, பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் குறைவான எண்ணிக்கையில் தான் இருந்தார்கள். ஆக தேவன், தமது குமாரனுக்கும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்களுக்கும், அவர்கள் யார் மீது கைகளை வைத்தார்களோ அவர்களுக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார்.

தேவனால் எல்லோருக்கும் பிசாசுகளைத் துரத்தும் வல்லமையானது கொடுக்கப்படவில்லை என்ற உண்மை இதன் மூலம் நிரூபணமாகிறது. அப்.19:3-17, வசனப் பகுதிகளில் அப்பொழுது தேசாந்திரிகளாய் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து: பவுல், பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள். பிரதான ஆசாரியனாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதனுடைய குமாரர் ஏழு பேர் இப்படிச் செய்தார்கள். பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லிப் பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள் மேல் பாய்ந்து பலாத்காரம் பண்ணி அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிர்வாணிகளும், காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரியவந்தபோது அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது

இது இன்றைய நாட்களில் மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார், தங்களுக்கு பிசாசுகளைத் துரத்தும் வல்லமை உண்டு என்று சொல்வதை எனக்கு நினைவுபடுத்துகிறது. முதல் நூற்றாண்டில், ஒரு சிலருக்குப் பிசாசு பிடித்திருந்தது போல், இன்றும் பிசாசினால் பிடிக்கப்பட்டவர்கள் இருந்து மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தார் அவைகளைத் துரத்த முயற்சித்தால், எவ்வித சந்தேகமுமின்றி பொல்லாத ஆவிகள் அவர்களை நோக்கி இயேசுவை அறிவேன், சுவிசேஷப் பிரசங்கியார்களையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி அவர்கள் மேல் பாய்ந்து அவர்களைப் பாடாய்ப்படுத்திவிடும். சொல்லப்போனால், இன்று பிசாசு பிடித்த யாரையாவது மார்க்கப்பிரிவினை பிரசங்கியார்கள் விரட்ட முயற்சித்தால் அவர்களுடைய கதி அதோ கதியாகிவிடும்.

தொடரும் ....

பெண்கள் பகுதி

## பெண்களுக்காக பெண்கள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் எல்லோரும் எல்லா சமயங்களிலும், எல்லாவற்றையும் கற்றுச் செயல்படுத்த முடிவதில்லை. ஓர் மாதிரி தேவைப்படுகிறது. கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் ஞாயிறு ஆராதனையில் பிரசங்கங்களை கேட்கிறோம். அரையும், குறையுமாக எடுத்துக் கொண்டு முழுமையாக செயல்படுத்த முடிவதில்லை. முப்பிரசங்கத்தையும் கவனிக்காமல், குறிப்பும் எடுக்காமல் வீட்டுக்குச் சென்றால் எந்த பயனும் இல்லை. குறிப்பாக, இளம் வயதுள்ள பெண்கள் தங்கள் வேலைப்பளு குடும்பப் பொறுப்பு, பிள்ளைகளை கவனித்தல் போன்ற காரியங்களில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் வேத வாக்கியங்களின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாமல் போய்விட வாய்ப்புள்ளது. இவைகளைப் பார்த்து வளரும் பிள்ளைகளும் தாயைப் போன்று அரையும், குறையுமாகக் கற்றுக் கொள்கிறார்கள்.

### கவனியுங்கள்

அருமையான சகோதரிகளே! சில சமயங்களில் நம்முடைய அபிப்பிராயங்களும், புரிந்து கொள்ளுதலும் சரியாக இல்லாதிருந்தும், அவை சரி என்று எண்ணிக் கொள்கிறோம். சூழ்நிலையையோ, உறவுகளையோ என்னால் ஏற்று சமாளிக்க முடியும் என்று எண்ணுகிறோம். ஆனால், வௌவாலைப் போன்று கண் வெளிச்சம் இல்லாமல் இருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம். அது மிகவும் ஆபத்தானது. சாலமோன் ஞானிநீதி 14:12 இவ்வாறாக எச்சரிக்கிறார். மனுஷனுக்குள் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் என்று.

சில நேரங்களில் நம்மை விட மூத்த சகோதரிகளின் உதவி நமக்குத் தேவைப்படுகிறது. அவர்கள் தங்கள் பொறுப்பில் நம்மை அனைத்து நாம் நடக்க வேண்டிய வழிகளை விளக்கிச் சொல்லு வார்கள். ஆக்கில்லா பிரிஸ்கில்லா அப். 18–ல் அப்பொல்லாவை சேர்த்துக் கொண்டு புத்தி சொன்னது போல. ரூத் புத்தகத்தில் நகோமி, ரூத்திற்கு ஆலோசனை சொன்னது போல நமக்கு முதிர் வயதுள்ள ஸ்திரீகளின் ஆலோசனை தேவை.

முதிர் வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்ற விதமாய் நடக்கிறவர்களும், அவதூறு பண்ணாதவர்களும் மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும்.

தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும் தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்கிரியைகளை போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கு புத்தி சொல்லு (தீத்து 2:3-5).

அருமையான சகோதரிகளே! மேலே வாசித்த வசனப்பகுதி விசேஷமாக பெண்களுக்காக பரிசுத்த ஆவியின் ஏவுதலினாலே பவுலின் மூலமாக தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டது. இந்த வசனப் பகுதிகளில் முதிர் வயதுள்ளவர்களும், பாலிய ஸ்திரிகளும் எப்படி வாழ வேண்டும் என்று தேவன் கூறுகிறார். அநேக சமயங்களில் இவ்வசனப்பகுதி நமக்கு பிடிப்பதில்லை. யாருடைய புத்திமதிகளையும் யாரும் ஏற்கத் தயாராக இல்லை. சில சபைகளில் பெரியவர்கள், சிறியவர்கள் இருதரப்பினரும் ஒட்டுவதே இல்லை. கிறிஸ்தவ சகோதரிகள் ஒருவருக்கொருவர் அன்புடனும் இணக்கமுடனும் இருக்க வேண்டும் என்ற விசேஷித்த உயவை தொலைத்துவிடுகின்றன.

பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பது அவசியம், அதுவும் அமைதியாக கற்றுக்கொள்ள வேண்டும் என்றுவேதம் சொல்கிறது. பொதுவான கூடுகைகயில் ஆண்கள் போதிக்க வேண்டும் என்று கூறுகிறது. இதுவே, பெண்கள் போதிக்கவே கூடாது என்று அர்த்தமாகிவிடாது. பெண்களுக்கு பெண்கள் போதித்து, புத்தி சொல்லக் கட்டளை பெற்றிருக்கிறோம்.

## ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க வேண்டும்

ஒருவரையொருவர் நேசித்து, அன்பு செலுத்த வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதற்கு வயது வரம்பு கிடையாது. இதுதான் தேவ திட்டம். யாக்கோபு 4:14-ல் வாசிக்கிறோம். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எபபடிப்பட்டது? உங்கள்

ஜீவன் எப்படிப்பட்டது? உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே எனவே, கிடைக்கும் தருணத்தைப் பயன்படுத்தி ஒருவருக்கு கொருவர் புத்தி சொல்ல வேண்டும். இதிலிருந்து நாம் தப்பித்தக் கொள்ள முடியாது. தேவன் இன்றைக்கும் நம்மை பார்த்துப் கொண்டிருக்கிறார். வசனம் கருப்பு, வெள்ளை நிறத்தில் இன்றும் நம் கையில்தான் இருக்கிறது.

சரி, புத்தி சொல்லும்போது, என்ன சொல்லகிறோம் என்பது முக்கிய மானது என்றாலும் எப்படிச் சொல்லுகிறோம். என்பது தான் முக்கியம். அன்புடன் நித்தியத்தை கைக்கொண்டு என்று (எபே 4:15)ல் வாசிக்கிறோம். தீத்து 2:5–ல் தேவவசனம் தூஷிக்கப்படாதபடி என்று பார்க்கிறோம். நம் செய்கையால், பேச்சால் வணத்திற்கு இழுக்கு வந்து விடக்கூடாது. தேவ தயவில் நாம் படைக்கப் பட்டிருப்பதால் நம் மூலமாக இந்த உலகம் தேவனைப் பார்க்க வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதுதான் நம் பிரதான விருப்பமாக இருக்க வேண்டாம். மறந்து விட வேண்டும். தேவன் அதற்கு உதவி செய்வாராக!! ஆமென் !!! ✝

## இக்கபோத்

**இவன் பினெகாசின் குமாரன். இவனுடைய காலத்தில் இவனுடைய குடும்பத்திலும், இஸ்ரவேல் தேசத்திலும் பல துன்பமான சம்பவங்கள் நடைபெற்றன. இதனால் பினெகாசின் மனைவி இவனுக்கு இக்கபோத் என்று பெயரிட்டாள். இந்தப் பெயருக்கு மகிமை இஸ்ரவேலை விட்டுப்போயிற்று** (The glory has departed from Israel !) **என்று பொருள் (1சாமு 4:21)**

# எப்படிப்பட்ட ஆயத்தமுள்ளவர்களாக இருக்கிறோம்?

Dr. ஏபில் நாயகம்

**யோ**வான் 3:16ல், தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ. அவன் கெட்டுப்போகாமல், நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நாம் அனைவரும் அவரோடிருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தேவ அன்பு வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்த அன்பை நாம் எவ்வளவு நன்றாக புரிந்திருக்கிறோம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், தேவனை அறிந்து கொண்டோம் என்பதற்காகவே அனைவருக்கும் நித்திய ஜீவன் பரிசாக கொடுக்கப்படாது. மத் 7:22,23 ல் தம்மை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிட்டவர்களைப் பார்த்து நான் உங்களை ஒருக்காலும் அறியேன் என்று இயேசு கூறியிருக்கிறார்.

ஆனபடியால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். மத் 24:26, 44 ஆகிய வசனங்களில், இரண்டாம் வருகையின் நாளை பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் என்றும் நாம் நினையாத நாழிகையில் மனுஷகுமாரன் வருவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, ஆயத்தமா யிருங்கள் என்ற அறிவுரையை இயேசு 44-ம் வசனத்தில் சொல்லுகிறார். ஆயத்தமாயிருங்கள் என்ற அறிவுரையோடு விட்டுவிடாமல், எப்படிப்பட்ட ஆயத்தத்தோடு இருக்க வேண்டும் என்பதையும் தம்மைப் பின்பற்றின ஜனக்கூட்டம் புரிந்து கொள்ள வேண்டும் என்று கருதி 24:3625,46 வசனங்களில் அதைத் தெளிவாகவும், சுலபமாகவும் புரிந்து கொள்ள இயேசு தம்முடைய பாணியின்படியே உவமைகளாக விளக்குகிறார். அதே நேரத்தில் ஜனங்களுக்கு ஏற்கெனவே தெரிந்த பழைய ஏற்பாட்டின் சம்பவத்தையும் அவர்களுடைய புரிதலுக்காகப் பயன்படுத்துகிறார்

24:36-25:46 வரை இருக்கக்கூடிய இந்த வேத பகுதி முழுவதும் ஆயத்தமாயிருங்கள் என்ற கருத்தை கொண்ட வசனப்பகுதிகளாக இருக்கிறது. இயேசு ஒரு காரியத்தை மீண்டும் மீண்டும் சொல்கிறார் என்றால் அது நிச்சயம் மிகமிக முக்கியமான ஒரு காரியமாகத் தான் இருக்க வேண்டும். கேட்பவர்களின், வாசிப்பவர்களின் நித்தியத்தை தீர்மானிக்கும் கருத்தாக இந்த ஆயத்தம் என்ற அறிவுரை இருக்கிறது என்பதை இயேசு அறிந்திருந்தார்.

மேற் சொன்ன அந்த வசனபகுதியில் நான்கு விதமான ஆயத்தம் குறித்து இயேசு பேசியிருக்கிறார்.

1. ஆயத்தமே இல்லாமல் இருப்பது
2. ஆயத்தப்படுவதற்கு காலம் தாழ்த்துவது
3. அரைகுறையாக ஆயத்தம் செய்வது
4. நல்ல ஆயத்தம் செய்வது

இப்பஜ இந்த நான்கு விதத்தையும் சொல்லி, ஒவ்வொரு விதத்திற்கான முடிவு என்ன என்பதையும் விளக்கியிருக்கிறார். இந்த நான்கையும் நாம் கவனித்து, நாம் எந்த நிலையில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

**1. ஆயத்தமே இல்லாமல் இருப்பது (மத் 24:36-44)**

இங்கே நோவாவின் காலத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தை மேற்கோள்காட்டி இயேசு பேசுவதை கவனிக்கமுடியும். நோவாவின் நாட்களில் மனுக்குலம் பாவத்தினால் நிறைந்திருந்தது. ஜனங்கள் தேவனை மறந்திருந்தார்கள். வசனம் 39 –ல் உணராத ஜனங்களாக இருந்தார்கள் என்று பார்க்கிறோம்.

40–41 ல் அப்பொழுது இரண்டுபேர் வயலில் இருப்பார்கள். ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏத்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள். ஒருத்து ஏற்றுக் கொள்ளப்படுவாள். ஒருத்தி கைவிடப்படுவாள் என்று வாசிக்கிறோம். அந்த வசனப்பகுதியின் பொருள் ஆயத்தத்தோடு இருப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், ஆயத்தமே இல்லாமல் இருப்பவர்கள் கைவிடப்படுவர்கள் என்பதே.

நோவா தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் யாவையும் செய்து முடித்து ஆயத்தத்தோடே காத்திருந்தார். எனவே, தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். உணராத இருதயத்தோடு ஆயத்தமில்லாத ஜனம் பெரு வெள்ளத்தில் அழிந்து போனார்கள் . எனவே, ஆயத்தம் நிச்சயம் வேண்டும். இயேசுவின் இரண்டாம் வருகையில் நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக இருக்க விரும்பினால், ஆயத்தப்படுதல் அவசியம்.

**2. ஆயத்தப்படுவதற்கு காலம் தாழ்துவது**

24:45–51 வரை நாம் வாசிக்கும் போது ஓர் உவமையை வாசிக்க முடியும். ஒரு எஜமான் இருந்தார். அந்த எஜமானுக்கு வேலைக்காரர்கள் இருந்தார்கள். எஜமான் நீண்ட நாள் பிரயாணமாய் போகிறார். அந்த சமயத்தில் தன் வேலைக்காரரைப் பராமரிக்க ஒரு ஊழியக்காரரை ஏற்படுத்துகிறார்.

48 –ல் அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாயிருந்து என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக் கொண்டு என்று வாசிக்கிறோம். ஆனால், எஜமான் திரும்ப வருவார் என்றும் வாசிக்கிறோம். எஜமான் திரும்ப வருவார் என்றும். அந்நேரத்தில் கணக்கெடுப்புக்குத் தான் ஆயத்த நிலையில் இருக்க வேண்டும் என்பதையும் அந்த ஊழியக்காரன் அறிந்திருந்தான். ஆனால், அந்த ஊழியக்காரனோ தன் இஷ்டப்படி கரியங்களை செய்து வந்தான். எஜமான் வர இன்னும் காலம் இருக்கிறது என்று நினைத்து புசித்தும், குடித்தும், வேலைக்காரரை அடித்தும் வந்தான்

நடந்தது என்ன? அந்த ஊழியக்காரன் நினையாத வேளையில் எஜமான் வந்து, அவனை கடினமாய் தண்டித்து அழுகையும் பற்க் கடிப்புமான இடத்திற்கு அனுப்பப்பட்டான் என்று வாசிக்கிறோம். ஆயத்தப்படுவதற்கு சாக்குபோக்கை இந்த ஊழியக்காரன் தேடினான். ஆயத்தப்படுவதற்கு காலம் தாழ்த்தும் போது என்ன நேரிடும் என்பதை ஜனங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக இயேசு இந்த உவமையைச் சொன்னார்.

*(அடுத்த இதழில் தொடரும் ....)*

---

## கிறிஸ்தவனின் நடை

1. **அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவானாக நட. எபே.4.1, கொலோ 1:10**
2. **விசுவாசத்தில் நட. 2. கொரி 5:7**
3. **அன்பில் நட. யோவா 15:10, எபே 5:12**
4. **ஞானமுள்ளவர்களாய் கவனமாக நட. எபே.5:15**
5. **நேர்மையாக நட 2.கொரி.4:2, 1தெச. 5:2**
6. **இயேசு நடந்ததைபோல நட. 1யோவா 2:6**

சிறுவர் பகுதி

# ஞானிகளுக்கு செவிகொடுத்தல்

Dr. *பிரெய்ஸி*

**ஹா**ய் குட்டீஸ்! தேவனுடைய கிருபையால் நீங்கள் எல்லாரும் நலமாயிருக்கிறீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் சிறுவர்களுகான கட்டுரகளை தவறாமல் படிக்கிறீர்கள் என்றும் நம்புகிறேன். இந்த மாதம் நாம் எஸ்தர் மகாராணியைப் பற்றி பார்ப்போம்.

எஸ்தர் ஓர் அனாதைப் பெண்ணாக இருந்தாள். அவள் மொர் தெகாயல் வளர்க்கபட்டாள் (எஸ்தர் 2:7) எஸ்தருக்கு ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் கண்களில் தயவு கிடைத்தது (2:8) ஸ்திரீகள் ராஜாவினிடத்தில் அழைக்கபட்ட போது அவர்கள் விரும்பியதை கன்னிமாடத்தியிருந்து அரண்மனைக்குப்போகஅனு மதிக்கப்பட்டிருந்தார்கள் (2:13) அதனால் எஸ்தர் ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் ஆலோசனைக்கு செவிகொடுத்து அதன்படி செய்தாள் (2:15).

ராஜ அரண்மனையில் எப்படி உடை உடுத்தித் தன்னை அழகுபடுத்திக் கொள்ளள வேண்டுமென்பதை அறியாத அனாதைப் பெண்ணாகிய எஸ்தர் அதைக் குறித்து அறிவுப் பெற்றிருந்த யேகாயின் ஆலோசனைக்கு செவி கொடுத்தாள்;. எஸ்தரைக் கண்ட எல்லாரிடத்திலும் அவளுக்கு தயவு கிடைத்தது. குறிப்பாக ராஜாவின் கண்களில் அவளுக்கு தயவு கிடைத்தது. அதன் விளைவாக எஸ்தர் மகாராணியாக முடி சூட்டப்பட்டாள் (2:17) பிள்ளைகளே அதைப்போலவே, நீங்கள் உங்கள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும், முதியவர்களுக்கும் செவிகொடுக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் உங்களைவிட ஞான முள்ளைவர்கள்

அருமையான பிள்ளைகளே! நீங்கள் ஞானமுள்ளவர்களாக மாற வேண்டுமென்றால், ஞானவான்களுக்கு செவிகொடுங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தருக்கு பயம்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நீங்கள் ஞானமுளள்வர்களாக மாறவேண்டுமென்றால் தேவனுக்குப் பயந்து அவரோடு சரியான உறவைத்துக்கொள்ள வேண்டும். எஸ்தரைப் போல தேவனுக்குப் பயந்து முதியோர் மற்றும் பெற்றோர்களின் ஞானமான வார்த்தைகளைத் தேடி செவிகொடுக்க வேண்டும்.

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

## வினாக்கள் :

1. கர்த்தருக்கப் பயப்படுதலை நீங்கள் எப்போது புரிந்து கொள்வீர்கள்?
2. நம் செவியை எதற்கு சாய்க்க வேண்டும்?
3. நம் இருதயத்தை எதற்கு அமையப்பண்ண வேண்டும்?
4. நாம் எதைச் சத்தமிட்டு அழைக்க வேண்டும்?
5. யார் ஞானத்தைக் தருகிறார் ?

### தேவ சமூகத்தில் செய்ய வேண்டியது

- இருதயத்தை ஊற்றி விட வேண்டும் – (சங் 62:8).
- விண்ணப்பம் பண்ண வேண்டும் (சகரி 7:2)
- தேவ சமூகத்தை நோக்கி கெஞ்ச வேண்டும் (மல்கியா 1:9)
- பயப்பட வேண்டும் (பிரசங்கி3:4)
- களி கூர வேண்டும் (நீதி 8:30)
- நித்தமும் தேட வேண்டும் (சங் 105:4)
- நாட வேண்டும் (சங் 24:6)
- வாயின் வார்த்தைகள்,இருதயத்தின் தியானம் தேவ சமுகத்தில் பிரீதியாக இருக்க வேண்டும் (சங்19:14)

# அறுவடையை நோக்கிய வாழ்க்கை

Bro. பென்னி மார்ட்டின்

அருமையான திருமறை ஆசான் வாசகர்களே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நன்மை செய்யும் படியாக நற்பிதாவினால் கட்டளையிடப்பட்டிருக்கிறோம். அதற்காக பிரதிதினம் பிராசப்பட்டு பலருக்கு நன்மை செய்தாலும் பிரதிபலன் உடனே கிடைக்காத காரணத்தால் சோர்ந்து போகிறோம். உறவுகளுக்கும் உளமாற நண்பர்களுக்கும் உபகாரங்கள் பல செய்து அதற்கு கைம்மாறாக அவர்கள் உபத்திரவங்களை நமக்கு செய்துவிடுகிற படியால் உண்மையாகவே, உருக்குலைந்து சோர்வடைந்து விடுகிறோம். இவ்வுலகில் பல சந்தர்ப்பங்களில் சோர்வு எனும் உணர்வு மனித இனத்தின் மகிழ்ச்சியை மங்கச் செய்துவிடுகிறது. இன்முகத்தோடு இன்பச்சுற்றுலா செல்பவர்கள் கூட இயற்கை காட்சிகளை பார்த்து பரவசமடைந்தாலும் காலப்போக்கில் சோர்வடைந்து விடுகிறார்கள். வெள்ளை மனம் கொண்ட பிள்ளைகளுக்கு பொம்மைகள் மீதும், விளையாட்டுச் சாமான்கள் மீதம் கொள்ளைப்பிரியம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.இருந்தபோதிலும் கூட இவர்களுக்கு இவைகளின் மீது ஆரம்பத்திலிருந்த அதே ஆர்வமும், ஆரவாரமும் கடைசிவரை இருப்பதில்லை, காரணம் சோர்வு பணப்பசி நிறைந்த உலகில் உயிரைப் பணயம் வைத்து பயணங்கள் பல மேற்கொண்டு கோட்டைகளில் கோலோச்சிய கோடீஸ்வரர்களும் அதே பணத்தினால் சோர்வடைந்துவிடுகிறார்கள். அதே போல் கிறிஸ்தவர்களும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் வந்த போது அந்த ஆரம்ப நாட்களில் இருந்த அதே ஆனந்தமும், ஆவிக்கரிய ஆவலும் காலப்போக்கில் காணாமல் போய்விடுகிதை நம்மால் காண முடிகிறது.

நானிலத்தில் நாகரிகமானவர்கிடம் நற்கிரியைகளை அதிகமாக செய்யும் மார்க்கம் எதுவென்று கேட்டாள் அவர்கள் நாணயமாக கிறிஸ்தவ மார்க்கம் என்று தான் சொல்வார்கள். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும் உலகத்தால் கறைபடாத படிக்கு தன்னை காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாய் இருக்கிறது. [யாக்கோபு 1:27]. இவ்வுலகில் நாங்களும் நற்கிரியைகள் செய்யும் மார்க்கமதான் என்று மார் தட்டிக்கொள்ளும் மாண்பற்ற மதக்கூட்டத்தார்கூட ஏகத்துவமாக ஏற்றுக்கொள்ளும் காரியம் கிறிஸ்தவர்கள் நலிவடைந்தவர்

களுக்கு நற்கிரியைகள் செய்வதற்குசிறந்தவர்கள் என்பது. கிறிஸ்தவம் தொன்றுதொட்டு தொலைநோக்குப் பார்வையில் தொய்வின்றி நற்கிரியைகளில் ஈடுபட்டபடியால்தான் மார்க்கப்பிரகாரமாக புதிய உயரங்களைத் தொட்டதுமல்லாமல் மானிடப்பிரகாரமாக பல இருதயங்களையம் தொட்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் நன்மை செய்வதில் சோபித்துவிடக்கூடாதென்று சோதனைக்காரன் சோர்வு என்னும் விதையை விதைத்து சோம்பேறிகளாக பலரை மாற்றிவிட்டான். பிரியமானவர்களே நாம் தேவனைப் பிரியப்படுத்த அவரை ஆராதிக்கிறோம், உபதேசம் சம்மந்தமான காரியங்களுக்காக பலரை கடுமையாக கடிந்து கொள்கிறோம். ஆனால் நாம் நன்மைசெய்வதில் நற்பெயர் பெற்றிருக்கிறோமோ? இது இன்றைய காலத்தில் அவசியமாகவும், அவசரமாகவும் உள்ளது. அன்றியும் நன்மை செய்யவும் தானம் தர்மம் செய்யவும் மறவாதிருங்கள் என்று வாசிக்கிறோம் (எபி13:16) நாம் நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருக்க வேண்டுமென்றால் குறைந்தது மூன்று காரியங்களை செய்ய வேண்டும்.

## பொறுமை

பரவசமும், பரபரப்பும் நிறைந்த இவ்வுலகில் பொக்கிஷமாக பொதித்து பட வைக்கவேண்டிய பொறுமையும் நற்பண்பும் நகைச்சுவையாக மாறிவிட்டது. ஏதாவது பெற்றுக்கொள்ள நாம் பொறுமையோடு காத்திருந்தால் என்ன இந்தக் காலத்தில் இவ்வளவு பொறுமையோடு காத்திருக்கிறீர்கள், உங்களுக்கு ரொம்பத்தான் பொறுமை என்று பரிவே இல்லாமல் பரிகாசம் செய்கிறார்கள். அதையெல்லாம் நாம் பொருட்படுத்தாமல் பொறுமையோடு காத்திருந்தால் நம்மை வேற்றுக்கிரக வாசிகளைப் போல் வேறுவிதமாக வேடிக்கைப்பார்ப்பார்கள். இன்றைய இயந்திரமயமான உலகில் முகர்ந்தது பார்ப்பதை யெல்லாம் நுகர்ந்துவிட வேண்டும் எனும் நூதனகலாச்சாரம் களைகட்டியிருக்கிறது. பொறுமையின் அருமையும் பெருமையும் தெரியாதவர்கள் அதில் சிக்கிக் கொள்ளலாம். ஆனால், பொறுமையின் உறைவிடமாகிய இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளும் நாம் பொறுமையெனும் நற்பண்பை எந்தளவு பெற்றிருக்கிறோம், இதைப்பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். அப்போஸ்தலனாகிய பேதுரு (2பேதுரு 1:7) வசனங்களில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டிய அல்லது கூட்டி வழங்க வேண்டிய பண்புகளை பட்டியலிடுகிறார், இதில் பொறுமை எனும் பண்பும் பட்டியிலிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல பொறுமை நம் ஜீவியத்தில் இல்லையென்றால்

நாம் கனி கொடுக்காதவர்களாகவும், கண் சொருகிப்போன குருடர்களாகவும் இருப்போமென்று 8,9வசனங்களில் குறிப்பிடுகிறார் என்று சொல்கிறார் [யாக்கோபு 5:11]. பழங்கால பக்திமானாகிய யோபுவின் செல்வ செழிப்பு அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாக இருந்தாலும் கூட காலங்களைக் கடந்து நம் கண்களுக்கு முன்பாக காட்சியளிப்பது அவருடைய பொறுமைதான். பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை வேத வாக்கியங்களில் ஓர் ஓட்டப்பந்தயமாக விவரிக்கப் பட்டிருக்கிறது. நாம் எல்லோருமே அந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் பந்தயப் பொருளாகிய நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓட வேண்டும். இந்த தொடர் ஓட்டப்பந்தயத்தில் தொலைவில் உள்ள தொடு கோட்டைத் தொட்டு பரிசைத் தட்டிச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பொறுமையெனும் நற்பண்பை உணர்ந்தவராகத்தான் எபிரேய ஆசிரியர் **ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தை பொறுமையோடு ஓடக்கடவோம்** என்று ஓங்கி ஒலிக்கிறார். [எபிரெயர் 12:1].

## II **நம்மை நாம் விவசாயிகளாக பார்க்கவேண்டும்**

விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பு என்பதை விவரம் தெரிந்தவர்கள் விநயமாக ஏற்றுக்கொள்வார்கள். நாம் சிட்டுக் குருவிகள் போல் சுதந்திரமாக சுற்றித்திரிந்த சிறு வயது முதல் இந்த நாள் வரை நம்மில் பலர் விவசாயம் எப்படி செய்யப்படுகிறது என்பதை பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். ஒரு விவசாயி விதைத்த அடுத்த நாளே விளைச்சலை காண முடியாது. விதை முளைத்து செடியாகி கொடியாகி பூ விட்டு காயாகி காய் கனிவதற்குள் காலமும் கனிந்து விடுகிறது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் பயிரை பராமரிக்க நீர்பாய்ச்சி, உரமிட்டு பூச்சிக்கொல்லி மருந்தடித்து வறட்சி, வெள்ளம் என்று எல்லையில்லா தொல்லை களை பொறுமையோடு சகித்துதான் விரும்பிய விளைச்சலைக் காண்கிறார். இங்கே விவசாயிடம் இருந்து நாம் பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஒரு விவசாயி நான் தினமும் பயர்களை பராமரிக்கிறேன், நீர் பாய்ச்சிகிறேன், உரம 1டுகிறேன் ஆனால் இந்த நன்றியில்லா பயிர்கள் இன்னமும் எனக்கு விளைச்சலைத் தரவில்லையென்று அறுவடை நாளுக்கு முன்பாகவே பயிர்கள் மீது கோபப்படுவதை சற்று கற்பனை செய்து பாருங்கள். அது எவ்வளவு முட்டாள்த்தனமாக இருக்கும்? பல கிறிஸ்தவர்கள் நாங்கள் கர்த்தருக்காக அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் இன்னும் அதற்காக பிரதிபலன் கிடைக்கவில்லையே என்று அங்கலாயிக்கிறார்கள். மனிதர்கள்

பெரும்பாலும் மற்றவர்கள் செய்யும் உபகாரத்தை மறுக்கும் மனப் பான்மை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். பலர் நன்றி யில்லாதவர்களாக இருக்கிறார்கள். வேறுவிதமாகச் சொன்னால் மனிதர்கள் அநியாயமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால் தேவன் உங்கள் கிரியையும் நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே [எபிரெயர் 6:10].

III **நாம் தொலை நோக்குப் பார்வை கொண்டிருக்க வேண்டும்**.

பிரியமானவர்களே, நீதியின் பலனாகிய தேவனுடைய ஆசீர்வாதங்களை குறித்து வானுலகின் வாரிசுகள் என்று வாயார வாழ்த்திக் கொள்ளும் நமக்கு தொலைநோக்குப்பார்வை இருக்கிறதா அல்லது குறுகிய பார்வை உடையவர்களாக இருக்கிறோமா? குறுகிய காலத்தில் நம்முடைய தீர்ப்பு அளவுகோல் நமக்கு நன்மை பயக்காது. ஆனால், நாம் சோர்ந்து போகாமல் தொடர்ந்து நன்மை செய்து கொண்டே இருப்போம். பல வேளைகளில் கிறிஸ்தவர்கள் தேவனே, உமது வழியில் காரியங்களை செய்து பார்த்தும் எந்த பலனும் இல்லை மாறாக பிரச்சனைகள் தான அதிகமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பிரச்சனைகள் தான் அதிகமாக இருு1க்கிறது என்று புலம்புவதை நாம் கேட்கிறோம். ஒரு சம்பவத்தின் முடிவை பார்ப்பதற்கு நமக்குப் பொறுமையில்லை என்றால் தேவன் மீது அநியாயமாக அறைகுறை குற்றச்சாட்டுகளை வைக்க வேண்டாம் மாறாக தேவனுடைய கிருபையிலும், உண்மைத்தன்மையிலும் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ள பழக வேண்டும்.

நாம் எதற்காக இப்பூமியில் தேவனை சேவிக்கிறோம்? தற்காலிகமான ஆசிர்வாதங்களுக்காகவா அல்லது நிரந்தரமான நித்திய ஜீவனுக்காகவா? ஒரு வேளை சாத்தான் இவ்வுலகில் நமக்கு உண்டான எல்லா உடமைகளையும், உயிரையும் பறித்துப் போட்டாலும் தேவன் நிச்சயமாக நம் நற்கிரியைகளுக்கு பலன ளிப்பார் எனும் நம்பிக்கையை மாத்திரம் இழந்து விட வேண்டாம். பிறர்க்கு நன்மை செய்ததினால் உங்களுக்கு தீமைதானே ஏற்படுகிறது, இனியும் நன்மை செய்து கொண்டிருக்கலாமா என்று பிசாசு நம்மை சோர்வடையச் செய்வான். ஆனால், தேவன் நமக்கு நிச்சயமாக இவ்வுலகத்தில் இல்லையென்றாலும் கூட வருகின்ற உலகத்தில் பலனளிப்பார் எனும் நம்பிக்கையோடு நன்மைசெய்து நாட்களை நகர்த்துவோம். ஆகையால் எனக்குப்பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதா வாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக [I கொரிந்தியர் 15:58]. ✝

# இயேசுவிடம் வந்த தகப்பன்

**சகோ. K.M. பிலிப் – பவானி**

அன்பான வாசகர் யாவருக்கும் உயிர்த்தெழுந்த நல்மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மனித வாழ்க்கையில் தேவைகள் அதிகம். அவைகளில் சில சுய முயற்சியினாலும், சில தானாகவும் இன்னும் சில பிறர் மூலமாகவும் நிறைவேறும். சில யாராலும் நிறைவு செய்ய முடியாத நிலையில் மனிதனின் இருதயம் தடுமாறுகிறது. வாழ்க்கையில் இருள் சூழ்ந்து தவிக்கிறான். இவர்களுக்கு மத்தியில் தாவீது தன் வாழ்க்கையை எப்படி நிலை நாட்டினார் என்பதை கவனியுங்கள். நாள்தோறும் நான் வாதிக்கப்பட்டும், காலை தோறும் தண்டிக்கப்பட்டிருக்கிறேன். மரணக் கட்டுகள் என்னை சுற்றிக்கொண்டது; பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது. இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன். எனக்கோ தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்வேன்.... [சங் 73:14;28;116:3,4]. நான் பிழைத்திருப்பதற்கு உமது வார்த்தையின் படி என்னை ஆதரித்தருளும். ஆம், எல்லா நிலைகளிலும் தேவனுடைய வார்த்தையின்படி செய்வதில் தாவீது உறுதி யாயிருந்தார். [119:116]. அதன் பலனை சங் 91:14;16 ல் பார்ப்போம். அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்;.... அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். ஆம், தேவன் நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார். மேலும், கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் [சாங் 138:8] என்ற தாவீதின் விசுவாசத்தோடு வாழ தேவன் கிருபை செய்வாராக.

நம்முடைய வாழ்க்கையிலும் இடறல்கள் துக்கங்கள் வரத்தான் செய்யும். இந்நிலையில் இங்கே யோவான் 4:46–54 பகுதியில் உள்ள சரித்திரம் நம் விசுவாச வாழ்க்கைக்கு அறைசுவல் விடுக்கும் சரித்திர மாக அமைகிறது. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோசமும் என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது [எரே 15:16]. இந்த வார்த்தையின் ஓர் உண்மை சரித்திரத்தைத்தான் நாம் பார்க்கப் போகிறோம்.

இங்கே சொல்லப்படும் மனிதன் தகப்பன். கப்பர்நாகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனாக இருந்தான். அவனுடைய மகனுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டது. நாளடைவில் மகன் மரண அவஸ்தை படும் நிலையாகிவிட்டது. தன் செல்வாக்கை பயன்படுத்தி அநேக வைத்தியங்கள் செய்திருப்பான்.

ஆனாலும், மகனை சுகப்படுத்த முடியாமல் மரண அவஸ்த்தை என்ற கொடுமையான நிலைக்கு மகன் ஆளானாள். இது அவன் இருதயத்தை உடைத்திருக்கும். இருள் சூழ்ந்திருந்த நிலையில் செய்வதறியாது தவித்துப் போனான். இந்த வேலையில் தான், இயேசு கலிலேயாவிலுள்ள கானா ஊரில் ஒரு திருமணத்தில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றிய செய்தியையும் ஒரு வேளை கேட்டிருப்பான். இயேசு அருகில் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்ட உடனே அவரைத் தேடிப்போனான். இங்கு கவனிக்க வேண்டியது, தகப்பன் ராஜாவின் மனுஷர் என்ற அளவில் செல்வாக்கு பெற்றவன். ஆட்களிடம் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் இயேசுவை இரதத்திலே ஏற்றி வீட்டிற்கே அழைத்து வந்திருப்பார்கள். ஆனால், இந்த தகப்பனே, வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28) என்ற வார்த்தைக்கேற்ப இவன் இயேசுவை சந்திக்கப் போனான். இதுவும் இவனுடைய தாழ்மை குணத்தை வெளிப்படுத்துகிறது. தகப்பன் உடனே புறப்பட்டு இயேசுவிடம் வந்தான். அன்பானவர்களே! தாமதம் காரியங்களை தடை செய்யும், இழக்கவும் செய்யும். பேதுரு மூலம் முதல் முறையாக இரட்சிப்பின் சுவிசேஷத்தை கேட்டவர்களில் மூவாயிரம் பேர் உடனே கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்கள் (அப் 2:41). சிறையில் அடைக்கப்பட்ட பவுலை காவல் கரத்த சிறைச்சாலைக்காரனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே அந்த இரவிலேயே ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவர்கள் (அப் 16:33). இந்த அகில உலக இரடசிப்பின் நற்செய்தியை மற்றவர்கள் காதில் கேட்கும்படி ஏதாவது செய்திருக்கிறோமா?

இந்த நல்ல தகப்பன் இயேசுவைக் கண்டதும் அவரைப் பணிந்து வேண்டிக் கொண்டான், தாழ்த்தினான். ஆம், தாழ்மை உள்ளவனுக்கோ கர்த்தர் கிருபையளிக்கிறார். (யாக்4:6). இயேசு அவனை நோக்கிப் பார்த்தார். இருதயத்தை ஆராய்ந்தறிகிற இயேசு, அவனை நோக்கி, நீ போகலாம் உன் குமாரன் பிழைப்பான், அல்ல பிழைத்திருக்கிறான் என்று நிகழ் காலத்தில் சொன்னார். அந்த தகப்பன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். இயேசுவின் இந்த ஜீவனும், வல்லமையுள்ள வார்த்தை, அந்த தகப்பனின் அவநம்பிக்கையை வீழ்த்தியது, பயத்தை போக்கியது. திடநம்பிகக்கையை கொடுத்தது. இயேசு சொன்ன வார்த்தையை நம்பிபோனான். இது சாதாரண காரியமா? இந்த இடத்தில் உங்களை

நிறுத்தி யோசித்துப் பாருங்கள். அந்தக்கொடிய சூழ்நிலையிலும் இயேசு சொன்ன வார்த்தையை நம்பி செயல்பட்டான் என்பது அந்த தகப்பன் இயேசுவின் வார்த்தையின் மீது வைத்துள்ள உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறதல்லவா? கிறிஸ்தவமே அடையாளம், அற்புதங்களில் அல்ல, தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளின்பேரில் தான் கட்டப்பட்டுள்ளது. உலகிலுள்ள அனைத்தும் தேவ வார்த்தையினால் படைக்கப்பட்டது. தேவனுடைய வார்த்தைக்கு ஜீவனும் உண்டு (எபி 11:3–4:12). இத்தேவவார்த்தை நம் பாவங்களை மன்னித்து இரட்சிக்கிறது முடிவில் நம்மை நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கச் செய்யும். இன்னும், இயேசுவின் வார்த்தையை நம்பி போனவனின் விசுவாசத்தை கனப்படுத்தினார். அந்த தகப்பன் தன் வீட்டிற்கு செல்லும் முன்பாகவே அவனைத் திடப்படுத்தும் நல்ல செய்தி, அவனைத் தேடி வந்தது. ஆம், இயேசு சொன்ன அதே மணி நேரத்தில் அவன் மகன் பிழைத்திருக்கிறான் என்ற மிக நல்ல செய்தி அவனை நாடி வந்தது. ஆம், தகப்பனின் வேண்டுதல் கேட்கப்பட்டது. இயேசுவின் வார்த்தையை முழுமையாக விசுவாசித்து உடனே கீழ்ப்படிந்தவனின் வேண்டுதல் கேட்கப்பட்டது. (யோவான் 14:21).

மிகவும் பிரியமானவர்களே! நம்முமுடைய தேவன் நம் சரீர சுகத்தில் மட்டும் அக்கறையுடையவரல்ல. சரீரத்தையும், ஆத்துமாவையுங்குறித்து கரிசனையுள்ளவர் என்பதை புரிந்து கொள்ளுங்கள். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் என்பதிலும் மிகவும் அக்கறையுள்ளவர் (1தீ3:4). தன்னிடத்தில் வந்த தகப்பனின் மகனுடைய சரீர குறைவை மட்டுமல்ல. ஆன்மீகக் குறைவையும் நீக்கிவிட்டார். அவனும் அவன் வீட்டாரனை வரும் விசுவாசித்தார்கள் (யோ 4:53) என்று பார்க்கிறோம். அன்பானவர்களே! நாம் இரட்சிப்பின் சுவிசேஷத்தை கேள்விப்பட்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறோம். இதே சுவிசேஷத்தின் நற்செய்தியை நம் மூலம் யாரோ ஒருவர் கேள்விப்பட்டு, இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? சமாதானத்தைக்கூறி நற்காரியங்களை சுவிசேசமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் (ரோமர் 10:15) என்று வேதம் விளம்புகிறது. அது உங்கள் பாதங்களாக இருக்க இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆமென்! ✝

# பொறுமையும் – பொறாமையும்

## Bro. பாண்டியன்

கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் சந்திக்க வேண்டிய இரண்டு முக்கிய குணாதிசயம் இந்தப் பொறுமையும் பொறாமையும். கிறிஸ்து சொன்னது போல முடிவு பரிந்தம் நிலைநின்று இரட்சிக்கப்பட வேண்டுமானால் நாம் இதையெல்லாம் கடந்து செல்ல வேண்டியதாயிருக்கிறது. ஆதி 26:12–16 வசனப் பகுதியில் ஈசாக்கு ஐசுவரியவானாக வளர்ச்சியடைந்த போது அப்பகுதியைச் சார்ந்த பெலிஸ்தர் ஈசாக்கின் மீது பொறாமை கொண்டனர். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்று வேதம் சொல்லுகிறது (நீதி 10:22). ஆனால், இவ்வுலகில் ஒருவனுடைய செழிப்பு மற்றவருக்கு பொறாமையை ஏற்படுத்துகிறது. இந்தக்குணம் பரவலாக நம்மிடையே காணப்பட்டாலும் அநேகர் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை என்பதே உண்மை.

பிரசங்கி 4:4 ல் மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லா கிரியையும் அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன் என்று ஞானி வருத்தப்படுகிறான். காயீன் தன் சகோதரனைக் கொன்றதற்கும் இதுவே காரணம். நம்மிடம் உள்ள குறைவைச் சரி செய்யாமல் பிறனுடைய வளர்ச்சி அல்லது மேன்மையைப் பார்த்துப் பொறாமைப்படுவது புத்தியீனம் ஆகும் ( யோபு 5:2). இவ்வுலகில் நடக்கும் தற்கொலை, கொலைகளுக்குக்கூட இந்தப் பொறாமைக்குணம் காரணமாக அமைந்து விடுகிறது. லேயாள் பிள்ளை பெற்ற போது தனக்கு பிள்ளை இல்லாததால் ராகேல் பொறாமைக்கொண்டு நான் செத்தாலும் சாகிறேன் என்று யாக்கோப்பிடம் சண்டையிட்டாள் (ஆதி. 30:1). அது போல யோசேப்பின் கனவைக்கேட்டு அவன் சொந்த சகோதரர்களே கொலை செய்யுமளவும் பொறாமை கொண்டனர் (ஆதி37:11).

இஸ்ரவேல் தேசமே பயந்து கொண்டிருந்த கோலியாத் என்னும் பெலிஸ்தனைக் கொன்று தாவீது வெற்றி வாகை சூடிய போது ஜனங்கள் சவுல் கொன்றது ஆயிரம் தாவீது கொன்றது பதினாயிரம் என புகழ்ந்து பாடினார்கள். அதைக்கேட்ட சவுல் ராஜா பொறாமைக்கொண்டான் ( I சாமு 18:29) அது மாத்திரமல்ல அவன் வாழ்நாள் முழுவதும் தாவீதுக்கு சத்துருவாக மாறினான் என்று காண்கிறோம். ஆக, சத்துருவை சிநேகி என்று கட்டளையிட்ட இயேசுவை பின்பற்றுபவரிடம் இந்த பொறாமை குணம் எழும்பாத படிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனென்றால் பொறாமை காச நோய் போன்றது. அது போல கொலை செய்யத்தூண்டும் கோபத்தை விட கொடியது என்று வேதம் எச்சரிக்கிறது. (நீதி 27:4).

உறவுகளுக்குள்ளே மாத்திரமல்ல இந்த பொறாமையினாலே அநேக சபைகளிலும் பிரிவினைகளிலும், வாக்குவாதங்களும் உண்டாகிறது. மோசே, ஆரோன் மீது ஜனங்கள் பொறாமை கொண்டதைப் போல (சங் 106216,17). இன்றும் சிலர் சபையை வவி நடத்தும் ஊழியர்களின் மீது பொறாமை கொள்கின்றனர். அதினாலே சபைகளில் பிரிவினைகள் ஏற்படுத்தி தேவனுடைய நாமத்தை துஷிக்கப்பண்ணும் அபாயத்தை உண்டு பண்ணுகிறார்கள். I கொரி. 1:9-13). நாம் சோர்ந்து போகாமல் நன்மை செய்யவும், நியாயக்கேடு செய்கிறவர்கள் மீது பொறமைப்படக்கூடாது என்றும் வேதம் சொல்லுகிறது. சங் 37:1 நீதி 23:17. ஒன்றை கவனியுங்கள். ஆண்டவர் மேற்கோள்காட்டிய உன்னைப்போலப் பிறனை நேசி என்ற பிரமாணத்தில் பொறாமை கூடாது என்று கட்டளையும் அடங்கி யுள்ளது (லேவி 19:18). தேவன் நியாயம் செய்வார் ( எசேக் 35:11). இது கொடிய பாவத்துக்கு இணையானது ரோம 13:13.

இப்போது பொறுமைக்கு வருவோம் ஆதி. 26:18 -22 பகுதியில் ஈசாக்கு பெலிஸ்தரால் தான் பாதிக்கப்பட்ட போது வாக்குவாதம் செய்யாமல் விட்டுக்கொடுத்து பொறுமையோடே விலகிச்சென்றார். இதுவே தேவ மனுஷனுடைய அடையாளமாகும். நம்முடைய வாழ்விலும் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நன்மைகள் தள்ளிப் போகும் போது பொறுமையும் ஜெபமும் நமக்குத் தேவையாய் இருக்கிறது. சங் 40:1 உலகத்தில் வசதிவாய்ப்புகள் பேர் புகழை விட பொறுமையே உத்தமம் என்கிறார் ஞானி (பிர :7:8) நீங்கள் இன்றும் சபையில் இருப்பதற்குக் காரணம் வசனத்தை பொறுமையோடு ஏற்றுப் பலன் தருவதே காராணம் (லூக் 8:15).

உபத்திரவத்தில் பொறுமையோடே இருந்த தேவதாசன் யோபு ஒரு சிறந்த முன் உதாரணமாகும். துன்பங்களில் தோள் கொடுக்க வேண்டிய மனைவியே அவனிடம் - தேவனை தூஷித்து ஜீவனைவிடும் என்ற போது யோபு மனம் பதறி ஒரு வார்த்தையும் பேசாமல், நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ? என்ற யாரும் எதிர்பாராத பதிலை பதிவு செய்கிறார். அதனால் தான் அப்போஸ்தலர் உபதேசத்தில் உபத்திரத்தில் பொறுமையாய் இருங்கள். என்கிற உபதேசம் முக்கியத்துவம் பெறுகிறது. நாம் சுலபத்தில் பொறுமையை இழந்து விடமுடியும். ஆனால், உபத்திரவம் தான் நமக்கு நம்பிக்கையையும், பொறுமையையும் உண்டாக்குகிறது என்கிறார். பவுல் (ரோமர் 5:3-4) இவ்வுலகம் பொறுமை கடலினம் பெரிது என்று சொல்லி ஒதுங்கிக் கொள்கிறது. ஆனால், தேவ வசனத்தினால் நாம் பொறுமையை பெற்றுக் கொள்கிறோம் ( ரோம 15:4) என்று பவுல் சுட்டிக் காட்டுகிறார்.

இந்தப் பாடத்தில் நாம் பார்த்த பெலிஸ்தரின் பொறாமை ஈசாக்கு என்ற தேவ மனுஷனை பாதித்தாலும் அவன் அதை பொறுமையோடே மேற்கொண்டதைப் போல் கிறிஸ்தவர்களாகிய நாமும் அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரமாக நடக்க கூடிய பொறுமை தேவைப்படுகிறது. [எபே.4:13] முக்கியமாக நாம் தவறுகிற விஷயம் அவசரப்பட்டு பேசி விடுதல். அதைப்பற்றி யாக்கோபு பேசுகிறதற்கு பொறுமையாய் இருக்கக்கடவர்கள் என்கிறார். எதவரைக்கும் என்பது உலகத்தார் கேள்வி. கிறிஸ்துவின் வருகை வரைக்கும் என்பது உலகத்தார் கேள்வி. கிறிஸ்துவின் வருகை வரைக்கும் என்பது வேதம் நமக்கு அளிக்கும் பதிலாகும் [ யாக் 5:7-11]. தேவக்கிருபையும் சமாதானமும் நம்மனைவரோடுங் இருப்பதாக. ஆமென்.

✝

---

## நாளும் நடப்பும்

1. இந்தியாவில் விரைவில் 2-12 வயது குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்படும்
   - மத்திய அரசு.
2. தமிழகத்திலும், பாண்டிச்சேரியிலும் ஹைட்ரோகார்பன் எடுக்க அனுமதி கேட்டு வேதாந்தா நிறுவனம் மீண்டும் விண்ணப்பம்.
3. உக்ரைன் - ரஷ்யா போர் ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொண்டது மட்டுமல்லாமல் பல நாடுகளில் உணவு பஞ்சத்திற்கு வழி வகுத்து விட்டது.
4. இலங்கையில் வரலாறு காணாத விலை உயர்வால் நாட்டு மக்கள் கடும் அவதி.
5. IPL கிரிக்கெட் போட்டிகள் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

# தற்காலிகமான காரியங்கள், நிரந்தரமான காரியங்கள்

## Joe W. Nichols

இவ்வுலக வாழ்க்கையில் எதுவுமே நிரந்தரமல்ல. எல்லாமே தற்காலிகமானது தான் என்பதை ஒருவர் உணரும் போது சற்று பயம் ஏற்படுகிறது. ஓசோன் படலத்தின் சுருக்கம், பூமியும் அதன் தண்ணீரும் மாசுபடுத்தப்படுதல், பூமியின் மீது விண்கல் மோதல், புவி வெப்பமயமாதல், வருங்காலத்தில் சூரியன் எரிந்து போகும் நிலை என்றெல்லாம் பொதுமக்கள் அதிகமாகப் பேசுகிறார்கள். இவைகளையெல்லாம் குறித்து பலர் கவலைப்பட்டுக் கொண்டிருக்க இதை அதிகப்படுத்தும் விதமாக எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வானமும், பூமியும் ஒழிந்துபோம் என்று வேதாகமும் போதிக்கிறது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் ஆசாரிப்புக்கூடாரம், தேவாலயம் மற்றும் ஆசாரியத்துவம் போன்றவைகளைக் குறித்து நாம் சிந்திக்கும் போது எல்லாமே கடந்து போகத்தக்கதாகவும் மாறிப் போகக்தக்கதாகவும் தான் வடிவமைக்கப்பட்டிருந்தது. எபிரெயர் 12:27 7:12). கூடாரமாக இருந்தாலும் சரி, தேவாலயமாயிருந்தாலும் சரி உள்ளேயிருந்த பொருட்கள் அழியும் தன்மை கொண்டவைகளாகவே இருந்தன. அவர்களுடைய தட்டு முட்டு சாமான்களும் அலங்காரப் பொருட்களும் எதிரிகளால் கொள்ளையிடப்பட்டு அழிக்கப்பட்டன. இன்று அங்கே மீந்திருப்பது அவர்களுடைய மகிமையான நேரங்களின் பதிவேடு களும், மனித இனத்தின் எந்தப் பிரிவையும் ஆளாத பழைமையான பிரமாணங்கள் தான்.

அதேபோல், திருமணத்தை எடுத்துகொண்டாலும் கூட மனிதனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கப்பட்டது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். திருமணத்தைப்பற்றிய தேவனுடைய நோக்கம் அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என்பதாயிருந்தது (ஆதியாகமம் 1:28). திருமணம் பிள்ளைகளை சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் போஷிக்க ஏற்றசுழலை உருவாக்குகிறது. ( எபேசியர் 6:4). எல்லா திருமணங்களும் ஏற்ற நேரத்தில் மரணத்தின் காரணமாக முடிவுக்கு வருகிறது. ஆனால், ஒரு தற்காலிக ஐக்கியமாக தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறது (ரோமர் 7:1,2)

தேவனால் வடிவமைக்கப்பட்ட மனிதக் குடும்பத்தை எடுத்துக் கொண்டாலும் கூட பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும். இப்பூமியில் குறுகிய காலத்தைத்தான் அனுபவிக்கிறது. ஏற்ற நேரத்தில் குடும்பங்கள் பிரிந்து மற்றகுடும்பங்களுக்கு வழிவிடுகின்றன. சரீரப்பிரகாரமான குடும்பங்கள் அநித்தியமானவைகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அவைகள் தேவனுடைய தறகாலிக நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன (மாற்கு 12;5).

இப்போதிருக்கின்ற வானங்களையும், பூமியையும் எடுத்துக் கொண்டால் அவைகள் அழிவுக்காக குறிக்கப்பட்டுள்ளன. அப்பொழுது, வானங்கள் மடமட என்று அகன்றுபோம், (ஐஐ பேதுரு 3:10). எதிர்காலத்தில் வானங்களும், பூமியும் அது சம்மந்தமான யாவும் இல்லாமல் போகும்.

சிருஷ்டிப்பின் தேவனுடைய நித்திய நோக்கத்தை எடுத்துக் கொண்டால் ஓர் அழகான சித்திரம் தோன்றுகிறது. இப்போதிருக்கிற வானங்களும், பூமியும் இல்லாமல் போகும் என்பது உண்மை தான், ஆனால், தேவன் தம்முடைய சொந்த ஜனங்களுக்கு ஒரு மேலான இடத்தை ஆயத்தமாக்கியிருக்கிறார். நம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அதையல்ல அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள் (எபிரெயர் 11:16). மோசே இவ்வாழ்க்கைக்கு அப்பால் பார்த்திருக்கிறார். இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (எபிரெயர் 11:26). இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால். தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருக்க வேண்டும். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்க வேண்டும் ( II பேதுரு 3:11-13).

ஆகவே, தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு இப்பூமிகுரிய அநித்தியமான காரியங்களிலிருந்து விடுபட்டு நித்தியமான காரியங்களுக்குள் பிரவேசிக்க வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார். அதுமாத்திரமல்ல, உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு தேவன் என்றென்றும் அழியாத இடத்தை ஆயத்தமாக்கியிருக்கிறார். (யோவான் 14:1-4; எபிரெயர் 10:19-23 12:27,28). தேவன் நமக்காக கீழ்க்காணும் காரியங்களை வடிவமைத்திருக்கிறார்.


- புதிய பிறப்பு மற்றும் புதிய ஆவிக்குரிய குடும்பம் (யோவான் 3:3,5; மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38,41,47; ஐ பேதுரு 2:59 ஐ தீமோத்தேயு 3:15).
- புதிய உயிர்தெழுந்த, அழியாத ஆவிக்குரிய சரீரம் (ஐ கொரிந்தியர்; 15:38-54;ஐ தெசலோனிக்கேயர் 4:13-18; வெளி 22:14)
- புதிய பரலோக நகரம் யோவான் 14:13


பிதா குமாரன் மற்றும் சத்திய ஆவியானவரோடு ஒரு புதிய தனிப்பட்ட, ஆவிக்குரிய பரலோக உறவு

நம் ஜீவனின் குறுகிய கால அளவையும் (சங்கீதம் 90:1-12) எத்தனை வேகமாக இவ்வுலகில் நம் நாட்கள் கடந்து சென்று கொண்டிருக்கிறது என்பதையும் எடுத்துக் கொண்டால், இவ்வுலகத்தாலும், உலகத்திற்குரிய காரியங்களாலும் கவரப்பட நம்மை நாம் அனுமதிக்கிறோமா அல்லது நிரந்தரமும் நித்தியமுமான தேவனுக் கேற்ற காரியங்களில் நம் சிந்தையைச் செலுத்தி அதில் வாழ்கிறோமா? பலர் உலகத்திலும் அதின் இன்பங்களிலும் அன்பு கொள்வதைத் தெரிந்து கொண்டு (யோவான் 2:15-17) மிக மோசமான கசப்பான விளைவுகளை சந்திக்கின்றனர். புதிய ஆவிக்குரிய நித்திய சரீத்திரத்தோடு, புதிய ஆவிக்குரிய நித்திய உறவோடு எந்த தற்காலிகமான பூமிக்குரிய ஆசீர்வாதத்தை ஒப்பிட முடியும்? ஆகவே, நிச்சயமாக கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை நாடுவதும், தேடுவதும் விவேகமான தீர்மானமாக இருக்கும் (தகொலோசெயர் 3:12)

இப்பூமியிலே நம்மை நாம் அந்நியரும், பரதேசிகளுமாகப் பார்த்தால் (பேதுரு 2:11 ) பூமியிலே துன்மார்க்கமான காரியங்களை உண்டு பண்ணுகிற அவயவங்களை அழித்துப்போடுவோம், புதித்தாக்கப்பட்ட புதிய மனுசனை தரித்துக் கொள்வோம் (கொலோ 3:5-15). இப்பாழாய்ப் போன உலகில் நமக்கு பிரகாசமான எதிர்காலம் இல்லை. பயன்படுத்து வதால் அழிந்துபோகும் பொருள்களைத்தான் இவ்வுலகம் சேர்த்து வைத்திருக்கிறது. தேவன் மாத்திரமே தம்முடைய இயேசு கிறிஸ்து மூலமாகவும், சிலுவை மூலமாக நமக்கு நம்பிக்கையைத் தருகிறார். ஆவிக்குரிய மற்றும் நித்திய காரியங்களைக் குறித்து பரந்து விரிந்த காட்சியைக் கண்ட நாம் எவ்வித தயக்கமுமின்றி, ஊக்கமாக, நம்பிக்கையாக பரலோகம் எனக்காக எல்லாவற்றையும் வைத்திருக்கிறது என்று சொல்ல முடியும். ✝


## 12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும். தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்









சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.